புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்
• திருவள்ளூர் ஆண்டு 2056 • மே 15, 2025 • புரட்சி 25 • முழக்கம் 18 • விலை ரூ.6.00

## கழகத் தோழர்கள் கள ஆய்வு
# வடகாட்டில் கொடூரமான ஜாதி வெறித் தாக்குதல்!

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி வட்டம், வடகாடு கிராமத்தில் அடைக்கலங் காத்தார் அய்யனார் கோவில் உள்ளது. இக்கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் 'அண்ணா கைப்பந்துக் கழகம்' என்ற பெயரில் விளையாட்டுத் திடல் அமைத்து 50 ஆண்டுகளுக்கும் மேலாக அப்பகுதி இளைஞர்கள் விளையாடி வந்துள்ளனர். இந்நிலையில், மேற்படி இடத்தில் தலித் மக்கள் பொங்கல் விழா நடத்துவதற்கு கடந்த 2016 ஆம் ஆண்டு முயற்சித்த போது, இரு தரப்பினருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டுள்ளது.





இதுதொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, மேற்படி இடம் பட்டியல் இன மக்களுக்குச் சொந்தமானது என்ற தீர்ப்பைப் பெற்றுள்ளனர். அண்ணா கைப்பந்து கழகத்தினர் மேல்முறையீடு செய்து வழக்கு நிலுவையில் உள்ளது.

இந்நிலையில் கடந்த சில நாட் களுக்கு முன்பாக மேற்படி அடைக்கலங் காத்தார் அய்யனார் கோவிலில் பொங்கல் வைப்பதற்காக தலித் மக்கள் ஏற்பாடுகள் செய்துள்ளனர். அப்போது பிற சமூகத்தினர் சாலை மறியல் போராட்டம் நடத்தி பிரச்சனையில் ஈடுபட்டுள்ளனர். இதில், எந்தக் குற்றமும் செய்யாத பட்டியலின மக்களைக் கைது செய்து காவல் துறையினர் அராஜகமாக நடந்து கொண்டுள்ளனர்.

இப்படியாக, வடகாடு பகுதியில் இரு தரப்பினரிடையே தொடர்ந்து பகைமைப் போக்கு இருந்து வந்துள்ளது. இதனை சுமுகமான முறையில் தீர்த்து வைப்பதற்கு மாவட்ட நிர்வாகமோ, காவல் துறையோ எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

இந்நிலையில், வடகாட்டில் உள்ள முத்துமாரியம்மன் கோவிலில் கடந்த திங்கள்கிழமை தேர்த் திருவிழா நடைபெற்றுள்ளது. திருவிழாவில் பட்டியலின மக்கள் குறிப்பிட்ட தூரம் வரை வெண்குடை ஏந்தி வருவது வழக்கமாக இருந்துள்ளது. திங்கள்கிழமை நடை பெற்ற தேர்த் திருவிழாவில் குறிப்பிட்ட எல்லையைத் தாண்டி பட்டியலின மக்கள் வந்துவிட்டதாக சில ஜாதி வெறியர்கள் தகராறு செய்துள்ளனர்.

இந்தத் தகராறு முற்றிய நிலையில், தலித் குடியிருப்புகளுக்குச் சென்று ஜாதிவெறியர்கள் வீட்டைக் கொளுத்தியும், அடித்து நொறுக்கியும் தலித் மக்கள் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தியுமுள்ளனர். இதில் இரண்டு இருசக்கர வாகனங்கள் எரிக்கப்பட்டுள்ளன. ஒரு இரு சக்கர வாகனம் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது. இரண்டு கார்கள் சேதமாக்கப் பட்டுள்ளன. 7 வீடுகள் அடித்து நொறுக்கப் பட்டுள்ளன. ஒரு வீடு எரித்து சாம்பலாக்கப் பட்டுள்ளது. இதில் படுகாயடைந்த 6 பெண்கள் உட்பட 20 பேர் புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.





**தாக்குதல் சம்பவம் குறித்து மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் கொடுத்துள்ள அறிக்கை முற்றிலும் உண்மைக்குப் புறம்பாக உள்ளது. ஏதோ, பெட்ரோல் பங்கில் குடி போதையில் இரண்டு இளைஞர்களுக்கு இடையே ஏற்பட்ட தகராறு போல சித்தரிக்க்ச்பட்டுள்ளது. வழக்கமாக பல இடங்களில் பட்டியல் இன மக்களுக்கு எதிராக செயல்படும் போக்கையே காவல்துறையினர் இதிலும் காட்டியுள்ளனர்.**

எனவே காவல்துறையினர் தங்கள் போக்கை மாற்றிக் கொண்டு தாக்குதலில் உண்மையில் ஈடுபட்ட ஜாதி வெறியர்கள் அனைவரையும் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்ய வேண்டும் என்று திராவிடர் விடுதலைக் கழகம் வலியுறுத்துகிறது.

புதிதாக களத்துக்கு வந்துள்ள இந்துத்துவ சிந்தனை கொண்ட ஒரு ஜாதி சங்கத் தலைவரின் பெரும்பங்கு குறித்தும் பரவலான பேச்சுகள் உள்ளன. இது குறித்தும் விரிவாக விசாரித்து உண்மையைக் கண்டறிவது எதிர்காலத்தில் இவ்வாறான சமூக மோதல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க உதவக்கூடும்.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட மக்களை புதுக்கோட்டை மருத்துவமனையிலும், தாக்குதல் நடத்தப்பட்ட வடகாட்டிலும் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சிவகங்கை மாவட்டச் செயலாளர் தோழர் பெரியார் முத்து, இளங்கோவன் மற்றும் பூபதி கார்த்திகேயன் ஆகியோர் சந்தித்து ஆறுதல் கூறினர். மேலும் விசிக,பொதுவுடமை இயக்கங்கள் தலித் இயக்கங்கள் அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு துணை நிற்கின்றன. திராவிடர் விடுதலைக் கழகமும் அவர்களோடு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாகவும் நீதி கிடைக்கவும் துணை நிற்கும் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## கழகத் தலைவருக்கு சீர் விருது

**சீர் வாசகர் வட்டம் கழகத் தலைவர் கொளத்தூர் மணிக்கு 2025 ஆண்டுக்கான சமூக போராளி விருது வழங்குகிறது. விருது தொகை ரூ. 1,00,000 இது தொடர்பாக சீர் வாசகர் வட்டம் வெளியிட்டுள்ள அறிக்கையில் போராட்ட களங்களில் 50 ஆண்டுகளுக்கு மேலாய் முதல் வரிசையில் நிற்கும் முன்கள வீரர் என்று பாராட்டி உள்ளது.வாசகர் வட்டத்தின் அறிக்கை:**



சாதி ஒழிப்பு, சமூகநீதி, பாலின சமத்துவம், பகுத்தறிவுப் பரப்புரை, சுரண்டல் எதிர்ப்பு என மானுட விடுதலைக்கான அனைத்துத் தளங்களிலும் போராட்டக் களங்களிலும் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாய் முதல் வரிசையில் நிற்கும் முன்கள வீரர்.

இட ஒதுக்கீட்டு வரலாறு, விடுதலை வேட்கை, தமிழர் பண்பாடு, பெரியாரும் தனித்தமிழ்நாடும், பெரியாருக்கு எதிரான முனை மழுங்கும் வாதங்கள் உள்ளிட்ட நாற்பதுக்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியர்.

தமிழர், தமிழ்நாடு நலன்சார்ந்த போராட்டங்களுக்காக எண்ணற்ற முறை சிறை சென்றவர். சட்டத்தை விட நியாயமே மேலானது என்பதை உரத்துச் சொல்பவர். தன் பேச்சையும் மூச்சையும் தமிழ்ச் சமூகத்துக்காகவே அர்ப்பணித்துக்கொண்ட வாழ்நாள் போராளி.

தமிழ்நாட்டு மக்களின் சிந்தனையில் மாபெரும் அறிவுப்புரட்சியை நிகழ்த்திய தந்தை பெரியாரின் #குடிஅரசு இதழ் தொகுப்பை அடுத்தத் தலைமுறைக்குக் கையளித்த குடிஅரசு நாயகர் தோழர் கொளத்தூர் தா.செ. மணி அவர்களுக்கு குடிஅரசு நூற்றாண்டில் அவரது செயல்பாடுகளுக்காக விருது வழங்குவதில் பெருமை கொள்கிறது சீர் வாசகர் வட்டம்.

## மே.18 கொண்டாட்ட நிகழ்வு தள்ளிவைப்பு!

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நடந்த மே18 அன்று திரை நட்சத்திரங்கள் பங்கேற்கும் நட்சத்திர இசை திருவிழா கன்னிகுமரியில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இதைத் தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி கீழ்க்கண்ட அறிக்கையை விடுத்து இருந்தார்.

துயர மிகுந்த இந்த நாளில் இவ்வாறான கொண்டாட்டத்தை நடத்துவது இன உணர்வுமிக்க தமிழர்களின் உணர்வுகளைப் பதறவைக்கும் ஒன்றாகும்.

அந்நிகழ்வின் ஏற்பாட்டாளர்களை இதனை வேறு நாளுக்கு ஒத்திவைக்க வேண்டுமாறு முதற்கட்டமாக கனிவுடன் கோருகிறோம் என்று குறிப்பிட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் நாசர் இதில் தலையிட்டு நிகழ்ச்சியைத் தள்ளி வைக்க முயற்சிகளை எடுத்தார். அதனைத் தொடர்ந்து நிகழ்ச்சிகள் தள்ளி வைக்கப்பட்டது. இத்தகவலை திரு நாசர் கழகத் தலைவருக்கு கடிதமாக எழுதியுள்ளார்.

இனமுரசு சத்தியராஜ் இந்த கடிதத்தை கழகத் தலைவருக்கு அனுப்பியுள்ளார். இதற்கு நன்றி தெரிந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி வெளியிட்ட அறிக்கையில்: ஒட்டுமொத்த உலகத் தமிழர்களின் மன உணர்வை வெளிப்படுத்தும் வகையில் நாங்களும் இன உணர்வாளர்களும் வைத்த கோரிக்கையை ஏற்று நட்சத்திர கொண்டாட்ட நாளை தள்ளி வைக்க ஆவன செய்த தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் நாசர்,இனமுரசு சத்யராஜ் மற்றும் பொறுப்பாளர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் தி.வேல்முருகன், தோழர்கள் தியாகு, கோவை கு.இராமகிருட்டிணன், சுப.உதயகுமாரன், கண.குறிஞ்சி, பொழிலன், இயக்குனர்கள் களஞ்சியம், கௌதமன், மருதுபாண்டியன் ஆகியோரும் இந்நிகழ்வின் தேதியை மாற்றக் கோரி குரல் கொடுத்தனர்.

### தலையங்கம்

# அமித்ஷாவின் பார்ப்பனியம்

இந்தியாவின் அனைத்து மொழிகளுக்கும் தாய்மொழி சமஸ்கிருதமே என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா அண்மையில் பேசி இருக்கிறார்.

ஒன்றிய அரசின் திருத்தப்பட்ட தேசிய கல்விக் கொள்கை 2020 சமஸ்கிருத்துக்கு மட்டுமே அழுத்தத்தையும் முன்னுரிமையும் தருகிறது. வணிகம், வானவியல், தத்துவம் உள்ளிட்ட அனைத்து பாடப்பிரிவுகளுடன் சமஸ்கிருத தொடர்புகளை இணைக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

தமிழ்நாட்டில் மும்மொழி திட்டத்தை ஆதரித்து கையெழுத்து இயக்கம் நடத்திய பாஜகவினர் இதில் இந்தி இல்லை என்று வாதிட்டனர். தாய்மொழி தான் வலியுறுத்தப்படுகிறது என்றும் இதற்காக மோடி இந்தி குறித்த சொற்றொடர்களை நீக்கி விட்டார் என்றும் பேசினார்கள்.

நடைமுறையில் மும்மொழி திட்டம் என்பது இந்தி திணிப்புக்கே வழிவகுக்கும் என்பதற்கு வலுவான காரணங்கள் இருக்கின்றன. ஆனாலும் அமித்ஷாவின் இந்த பேச்சு மும்மொழி திட்டம் பார்ப்பனியத்தை வலியுறுத்துவதே என்பதை உறுதிப்படுத்துகிறது.

அமித்ஷா மொழி அறிஞர் அல்ல. அனைத்து மொழிகளுக்கும் சமஸ்கிருதமே தாய்மொழி என்பதற்கு அவர் எந்த வித சான்றுகளையும் முன்வைக்கவில்லை. உண்மையில் அமித்ஷாவின் தாய்மொழி குஜராத்தி மும்மொழி கொள்கை தாய்மொழியை வலியுறுத்துகிறது என்று சொன்னால் அவர் குஜராத்தி மொழி பெருமையைத் தானே பேசி இருக்க வேண்டும் மாறாக சமஸ்கிருதத்தை ஏன் தூக்கி பிடிக்கிறார்.

பார்ப்பனிய சக்திகள் கண்மூடித்தனமாக இப்படி ஒரு கருத்தை வழக்கமாக கூறிவருகிறார்கள். சொல்லப்போனால் உலகின் முதல் மொழி குறித்தோ உலகின் முதல் மனிதர்கள் குறித்தோ நேரடியான விடை அறிவியலில் இல்லை என்று மானுடவியலாளர்கள் (anthpologists) கூறுகிறார்கள்.

ஆனால் இந்திய துணைக்கண்டத்தில் எது தொன்மையான முதல் மொழி என்று ஒப்பீட்டளவில் உறுதியாகக் கூறமுடியும். சமஸ்கிருதத்தின் முதல் கல்வெட்டு கி.பி 300-ல் தான். ஆனால் அதற்கு 600 வருடங்களுக்கு முன்பே தமிழில் கல்வெட்டு கிடைத்து விட்டது.

ஆதிச்சநல்லூர் அகழாய்வில் கிடைத்த தங்க ஆபரணத்தை ஒன்றிய அரசின் தொல்லியல் துறை ஆய்வு செய்து 3000 ஆண்டுகள் பழமையானது என்று அறிவித்தது. அக்காலத்தில் சமஸ்கிருதம் தோன்றவே இல்லை.

2016-ம் ஆண்டு மதுரைக்கு அருகே வைகைக்கரை கிராமம் ஒன்றில் கண்டெடுக்கப்பட்ட பானைகளில் தங்கக் கட்டிகள் இருந்தன. அந்த தங்கக் கட்டிகளில் தமிழ் பிராமி எழுத்து வடிவம் இடம் பெற்று இருந்ததை தொல்லியல் துறை உறுதிச் செய்தது.

சமஸ்கிருதம் ஒரு மொழி என்பதை விட பார்ப்பனியத்தின் பண்பாட்டு ஒடுக்குமுறை வடிவமாகும். சமஸ்கிருத வேதங்கள் சூத்திரர்கள் படிப்பதற்கு தடை விதித்தன. வேதங்களை படித்தால் நாக்கை வெட்ட வேண்டும் என்று மனுதர்மம் கூறியது.

வேதம் கற்பது மட்டுமே கல்வி என்ற நிலை இருந்தது. மெக்காலே கல்வித்திட்டம் வரும் வரை வேதபாடசாலைகளே இந்த நாட்டில் இருந்தன. அதற்கு பின்பும் கூட பிரிட்டிஷாரின் நேரடி ஆட்சிக்கு உட்படாத திருவிதாங்கூர், கொச்சி போன்ற சிற்றரசுகளில் ஒடுக்கப்பட்ட ஜாதியினருக்கு கல்வி மறுக்கப்பட்டது.

தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் என்னும் நூலில் டாக்டர் கே.கே பிள்ளை இவ்வாறு கூறுகிறார்:

"உழைப்பின்றியே தானமாகப் பெற்ற நிலங்களும், ஊர்களும், அரசாங்க செல்வாக்கும். வேள்வி வளர்க்கும் தனி உரிமையும் தம்மிடம் குவிக்கப்பெற்ற பிராமணர்கள் அவை யாவும் எக்காலமும் தம்மிடமே நிலைத்து நிற்கவும். மென்மேலும் வளர்ந்து வரவும் தம் குலத்தின் தலைமைப் பதவி நீடித்து வரவும் பல முயற்சிகளை மேற்கொள்ளலானார்கள். வேந்தர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் வமிசங்களையும், கோத்திரங்களையும், சூத்திரங்களையும் கற்பித்துக் கொடுத்தார்கள். மன்னர்களும் ஜாதி ஒழுக்கத்தை நிலை நாட்டுவதையே தம் சீரிய கடமை எனக் கூறும் மெய்கீர்த்திகளைப் புனைந்து கொண்டனர். ஆரியப் பழக்க வழக்கத்தைப் பாராட்டிக்கூறும் சாஸ்திரங்களும், புராணங்களும் எழுந்தன. அவற்றைப் பிராமணர் பயில்வதற்கென அரசர்கள் பல கல்வி நிறுவனங்களை அமைத்துக் கொடுத்தனர்.''- (பக்கம் 318).

மன்னர்கள் நிறுவிய பள்ளிகள் யாவும் பிராமணருக்கு மட்டும் வடமொழிப் பயிற்சியை அளித்து வந்தன. சமஸ்கிருதம் இப்படி தமிழர்களின் வாழ்வுரிமையையும், கல்வியையும் சிதைத்தது. மருத்துவம் படிப்பதற்கு சமஸ்கிருதம் வேண்டும் என்ற நிலை பனகல் அரசர் காலத்தில் தான் ஒழிக்கப்பட்டது. சென்னை பல்கலைக் கழகத்தில் தமிழ் பண்டிதர் பட்டம் பெறுவதற்கு கூட சமஸ்கிருத அறிவு தேவை என்ற விதி இருந்தது. இதை ஒழிப்பதற்கு கடும் போராட்டம் நடந்தது. இன்றைக்கும் கோயில் கருவறை வழியாக சமஸ்கிருதத்துக்கே உரிமை கொண்டாடுகிறார்கள்.

காஞ்சி சங்கரமடங்கள் உள்ளிட்ட பார்ப்பன நிறுவனங்கள் பார்ப்பனர்களுக்கு மட்டுமே வேத பாடசாலைகளை உருவாக்குகிறார்கள். அர்ச்சகர் பயிற்சி பெற்றவர்கள் ஆகம கோயில்களை ஆக்கிரமித்துக் கொள்கிறார்கள். கடல் தாண்டக் கூடாது என்ற சாஸ்திரங்களை மீறி அர்ச்சகர் வேலைக்கு பார்ப்பனர்கள் வெளிநாடு பறக்கிறார்கள். ஆனால் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகும் பயிற்சி பள்ளியில் முறையாக அர்ச்சகர் பயிற்சி பெற்ற பார்ப்பனரல்லாத 200-க்கும் மேற்பட்டோர் 10 ஆண்டுகளுக்கு மேலாக வேலைக்கு காத்து இருக்கிறார்கள். சமஸ்கிருத பண்டிதர்கள் உச்ச நீதிமன்றம் போய் தடை வாங்குகிறார்கள்.

கல்வி உரிமைகளை பறித்து ஓர் இனத்தின் பண்பாட்டை சிதைக்கும் சமஸ்கிருதம் தான் அனைத்து மொழிகளுக்கும் தாய்மொழி என அமித்ஷா கூறுகிறார். இதை வலியுறுத்தும் மும்மொழி கல்விக் கொள்கையை தமிழர்கள் ஏற்க வேண்டும் என்பது பார்ப்பன அதிகாரத் திமிர் அல்லாமல் வேறு என்ன?..

# விகடனின் ஜாதி ஒழிப்பு நாடகம்!

விஜய் தொலைக்காட்சி நடத்திய 'நீயா நானா நிகழ்ச்சியில்' போடி நாயக்கனூரைச் சேர்ந்த ஒரு தலித் மாணவி 'காலனி' என்ற சொல் எப்படி காயப்படுத்துகிறது என்ற வேதனையை உருக்கமுடன் பேசினார். அடுத்த இரண்டு நாட்களில், தமிழ்நாடு முதல்வர் சட்டமன்றத்தில் இனி அரசுப் பதிவேடுகளில் 'காலனி' என்ற சொல் நீக்கப்படுகிறது என்ற அறிவிப்பை வெளியிட்டார்.

இந்த வாரம் வெளிவந்துள்ள ஆனந்த விகடன் வார ஏடு வார்த்தையை நீக்கி விட்டால் மட்டும் ஜாதி தீண்டாமை ஒழிந்து விடுமா? என்று தமிழ்நாடு அரசை கடுமையாக் கண்டித்து தலையங்கம் தீட்டி இருக்கிறது. ஜாதி ஒழிப்புக் களத்தில் குறியீட்டு ஒழிப்புகளும் ஒரு தேவைதான்; ஜாதி ஒழிப்புக்கு மந்திரக்கோல் எதுவும் கிடையாது. பல்வேறு களங்களில் தொடர்ச்சியாக போராட்டங்கள் நடைபெற வேண்டும். ஜாதி தீண்டாமைகளை முற்றிலும் ஒழித்து விடாமல் இப்படி பெயரை மட்டும் மாற்றுவது சரியா என்று கேட்கும் கேள்விகளில் திமுக எதிர்ப்பு என்ற உள்நோக்கத்தைத் தவிர கொள்கைப் பார்வை ஏதும் இருப்பதாக நமக்கு தெரியவில்லை.

ஆனால், தமிழ்நாடு அரசும் நிர்வாகமும் ஜாதிய மனநிலையிலேயே செயல்படுவதாக தடித்த வார்த்தைகளால் அந்தத் தலையங்கம் எழுதப்பட்டுள்ளது; பரவாயில்லை, ஆனந்த விகடன் ஜாதியை எதிர்த்து எழுதுவதற்கு ஒரு வாய்ப்பையாவது இந்த அறிவிப்பு கொடுத்திருக்கிறது என்பதற்காக நாம் பாராட்டலாம், அதே நேரத்தில் இதே தேதியிட்ட ஆனந்த விகடன் பத்திரிக்கையில் காஞ்சி சங்கர மடத்தின் புதிய சங்கராச்சாரியையும் காஞ்சி மடத்தின் பெருமையையும் பாராட்டி மகிழ்ந்து கொண்டாடி இருக்கிறது. ஜாதியையும் தீண்டாமையையும் மடத்தின் கொள்கையாகவே அறிவித்திருக்கும் மடம் அது; இரண்டு நாட்களுக்கு முன் கூட அந்த மடத்தின் நிர்வாகி மடத்தின் மரபுப்படி எவரையும் தொட்டு பேசக்கூடாது என்று பேட்டி அளித்திருக்கிறார்.

தீண்டாமை ஷேமகரமானது என்று கூறியவர் மகா பெரியவர் சந்திர சேகரேந்திர சங்கராச்சாரி,விடை பெற்று இருக்கிற சங்கராச்சாரி விஜயேந்திரன் பெங்களூர் பிராமண சங்க மாநாட்டில் பிராமணர்கள் தனி குடியிருப்பில் தான் வாழ வேண்டும் பிற ஜாதியினருடன் கலந்து வாழக்கூடாது என்று வெளிப்படையாக பேசி அது டைம்ஸ் ஆப் இந்தியா போன்ற பத்திரிகைகளில் வெளிவந்து இருக்கிறது. அண்மையில் திராவிடர் விடுதலைக் கழகம் இது ஒரு இன ஒதுக்கல் குற்றம் என்று நடவடிக்கை கோரி தமிழ்நாடு முழுதும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. பகிரங்கமாக ஜாதி தீண்டாமையை செயல்படுத்தி வரும் பார்ப்பன மடத்தின் பெருமையை பேசிக்கொண்டு தலையங்கத்தில் மட்டும் ஜாதி தீண்டாமை ஒழிப்பு வீரர்களைப் போல் நாடகம் நடத்துகிறது விகடன். இவர்களின் நோக்கம் ஜாதி தீண்டாமை ஒழிப்பு அல்ல மாறாக திராவிட மாடல் ஆட்சியை எந்த ஆயுதத்தை எடுத்தாவது வீழ்த்தியாக வேண்டும் ஆவேசம்தான்!.

விடுதலை இராசேந்திரன்


# இணையத்தை ஆக்கிரமித்த ஏ.ஐ. பெரியார்!


சட்டகத்தில் அடங்காத பெரியாரின் படம் ஒன்று, *'The Man who does not fit into frames'* என்ற குறிப்போடு புகழ்பெற்றது. அதன் அர்த்தமும் ஆழமானது. எந்தப் புதிய தொழில்நுட்பம் அறிமுகம் ஆனாலும், அதை பெரியார் எப்படி அணுகுவார் என்பது பேசுபொருளாக இருக்கும். அந்த வகையில், செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தையும் அவர் விட்டுவைக்கவில்லை. மறைந்து அரை நூற்றாண்டுகளுக்குப் பிறகும் கருத்தியலாகவும், விவாதமாகவும் இருக்கும் பெரியார், இப்போது அழகியலாக 'டிரெண்டிற்கு' வந்திருக்கிறார்.

ஏ.ஐ.-யில் உருவாக்கப்பட்ட பெரியார் படங்கள் பல சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றன. புரட்சியாளர் அம்பேத்கர், கார்ல் மார்க்ஸோடு அமர்ந்து பேசுவது போலவும், மடிக்கணினி பயன்படுத்துவது போலவும், அம்பேத்கரை அமர வைத்து பெரியார் 'புல்லட்' ஓட்டிச் செல்வது போலவும், பள்ளிச் சிறுமியை அழைத்துச் செல்வது போலவும், பட்டம் வாங்கிய இளம்பெண்கள் பெரியாரைத் தூக்கிச் சுமந்து கொண்டாடுவது போலவும் என விதவிதமான பெரியார் படங்கள், செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டு சமூக ஊடக உலகில் உலா வந்து கொண்டிருக்கின்றன.

ஃபேஸ்புக், எக்ஸ், இன்ஸ்டாகிராம், வாட்ஸ் அப் ஸ்டேட்டஸ்கள் என எங்கு சென்றாலும் ஏ.ஐ. தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட பெரியாரின் படம் பார்வைக்கு வந்துவிடுகிறது. இந்த டிஜிட்டல் யுகத்தில் பெரியார் இருந்தால் எப்படி இருப்பாரோ, அப்படியே அச்சு அசலாக, 94 வயது முதியவரின் முகத்தில் இருக்கும் சுருக்கங்கள் கூட துல்லியமாய் தெரியும் அளவுக்கு டிஜிட்டல் உருவகமாகியிருக்கிறார். 'நகல் எடுக்க முடியாத அசல்' என்று பெரியாரைச் சொல்வார்கள். அவரை அசலை விட மிக நேர்த்தியாக நகலெடுத்து அசத்துகிறது செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம்.

நன்றி: முரசொலி





# நூற்றாண்டு காணும் பெரியார் பேரொளி
# திருவாரூர் தங்கராசு

சுயமரியாதை சுடரொளி திருவாரூர் தங்கராசு நூற்றாண்டு கூட்டத்தை நிமிர்வோம் வாசகர் வட்டம் கழக தலைமை அலுவலகத்தில் 9-5-25 அன்று நடத்தியது.

திருவாரூர் தங்கராசு இயக்கத்தின் பரப்புரையளராக பெரியார் கொள்கைகளை வாழ்நாள் முழுவதும் கொண்டு சென்றார்.

1927-ல் பிறந்த அவர் 1947-லிருந்து 1973 வரை திராவிடர் கழகத்தில் முதன்மை இயக்கப் பேச்சாளராக இருந்தார். ஒவ்வொரு திராவிடர் கழகத்தின் குடும்பத்தினருடன் அவர் நெருக்கமாக இருந்தவர். 1957 நடந்த சட்ட எரிப்பு போராட்டத்தின் போது தமிழ்நாடு முழுவதும் சிறையில் அடைக்கப்பட்ட கழகத் தோழர்களை பெரியார் நேரில் சென்று சந்தித்தார். அப்போது திருவாரூர் தங்கராசு அவர்களை பெரியார் உடன் அழைத்து சென்றார். கலைஞர் எழுதி நடிகவேள் எம். ஆர் ராதா நடித்த தூக்கு மேடை நாடகத்தில் நடித்தவர் திருவாரூர் தங்கராசு.



நடிகவேள் எம்.ஆர்.ராதா நடித்து நாட்டையே அதிரச் செய்த ராமயாணம் நாடகத்துக்கு கதை வசனம் எழுதியவர் இவர் தான்.

நடிகவேள் நடிப்பில் இவர் எழுதிய ரத்த கண்ணீர் நாடகம் தான் தமிழ்நாட்டில் இதுவரை அதிக எண்ணிக்கையில் அரங்கேற்றப்பட்ட நாடகம்.நேஷனல் பிக்ஸ்சர்ஸ் அதிபர் பெருமாள் இதை திரைப்படமாக்கினார். இன்று வரை அந்த திரைப்படம் பலராலும் விரும்பி பார்க்கப்படுகிறது.

பெரியார் மறைவுக்குப் பிறகு திராவிடர் கழகத்தில் இருந்து விலகி தனி அமைப்பு உருவாக்கி 2014 இறுதி மூச்சு அடங்கும் வரை பெரியார் கொள்கைகளையே பரப்பி வந்தார்.

பெரியார் திராவிடர் கழகம் சார்பாக 2008 ஜூன் 14 அன்று சென்னை எம்ஜிஆர் நகரில் அவரது 60 ஆண்டு இயக்கத் தொண்டை பாராட்டி விழா ஒன்று நடத்தது.

கழகத்தின் மூத்த தலைவர் திருவாரூர் தங்கராசுக்கு பாராட்டு விழாவும், நாத்திகர் விழாவும் எழுச்சியுடன் நடந்தது. ஆயிரக்கணக்கான கழகத் தோழர்களும், பொது மக்களும் விழாவில் பங்கேற்றனர். மாலை 6 மணியளவில் எம்.ஜி.ஆர். நகரில், கழக சார்பில் நடிகவேள் எம்.ஆர். ராதா நினைவாக நிறுவப்பட்ட நிழல் கொடையை நடிகவேள் எம்.ஆர். ராதா மகனும், தென்னிந்திய நடிகர் சங்கப் பொதுச் செயலாளருமான ராதாரவி திறந்து வைத்தார். முன்னதாக கழகத் தோழர்களின் பறை முழக்க நிகழ்ச்சி நடைபெற்றது. கழகத் தோழர்கள், பொது மக்கள் சூழ்ந்து நிற்க, ராதாரவி நிழற் குடையைத் திறந்து வைத்து பெரியார் திராவிடர் கழகத்தின் முயற்சிகளைப் பாராட்டினார்.

தோழர் கரு. அண்ணாமலை வரவேற்க, தோழர் அன்பு. தனசேகர் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். வழக்கறிஞர் அமர்நாத், தோழர் கேசவன், வழக்கறிஞர் இளங்கோ, தோழியர் பாரதி, பொதுச் செயலாளர்கள் விடுதலை இராசேந்திரன், கோவை இராமகிருட்டிணன், திரவரங்கம் பெரியார் சிலை அமைப்புக் குழுத் தலைவர் டாக்டர் முத்து, மூத்த பெரியார் தொண்டர் திருச்சி வீ.அ. பழனி, விழாவின் தலைவர், கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லக்கண்ணு, கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றியதைத் தொடர்ந்து, மூத்த தலைவர் திருவாரூர் தங்கராசு ஏற்புரை நிகழ்த்தினார்.

நிகழ்ச்சியில் திருவாரூர் தங்கராசு நெருக்கமான தோழரும் அவர் பேசிய கூட்டங்களுக்கு உடன் சென்றுவரும் சுயமரியாதை சுடரொளியுமான திருச்சி வி.ஆர் பழனி பல வரலாற்றுச் செய்திகளை பதிவு செய்தார். அவரது உரை: பெரியாரை எதிர்த்த பார்ப்பனர்களுக்கு சரியான பதிலடியை தந்தது. "ஈ.வெ.ரா. இறப்பதென்றோ" எனும் தலைப்பில் திருவாரூர் தங்கராசு அவர்கள், ஒரு வெளியீட்டைக் கொண்டு வந்தபோது திராவிடர் கழகத் தோழர்களே அத் தலைப்பைக் கண்டு முதலில் ஆத்திரமடைந்து, பிறகு தெளிவு பெற்றனர்.

1947 ஆம் ஆண்டு முதல் நான் அவருடன் இணைந்து செயல்பட்டுள்ளேன். அவரது கொள்கை உறுதி எத்தகையது என்பது எனக்குத் தெரியும் அவர் 'நவீன லீலா' என்ற நாடகத்தை எழுதி நடித்தார். நானும் அந்த நாடகத்தில் நடித்தேன். கழகத் தோழர் லால்குடி முத்துச் செழியன் போன்றவர்கள் எல்லாம் அதில் நடித்தார்கள். மறைந்த டார்பிடோ ஏ.பி. ஜனார்த்தனம் அவர்கள் நடத்தி வந்த 'தோழன்' பத்திரிகைக்கு நிதி திரட்டுவதற்காக தஞ்சை நகரில் அந்த நாடகத்தை நடத்தினோம். சின்னாளப்பட்டியில், நாகர்கோயிலில், நன்னிலத்தில் கழக வளர்ச்சிக்கு நிதி திரட்ட திருவாரூர் தங்கராசு அவர்கள் இந்த நாடகத்தை நடத்தினார்.

கிருஷ்ணகிரியில் திருவாரூர் தங்கராசு அவர்கள் பேசும்போது கூட்டத்தில் பெரும் கலவரத்தை உருவாக்கி தாக்கினார்கள். சலசலப்புக்கு அஞ்சாமல், திருவாரூர் தங்கராசு துணிவுடன் எதிர்கொண்டார். அப்போது அரசு வழக்கு தொடர்ந்தது. வழக்கு நடத்துவதற்காக, அய்யா பணம் தர முன் வந்தபோது, அதை திருவாரூர் தங்கராசு வாங்க மறுத்துவிட்டார். வழக்கறிஞர் இல்லாமல், தானே நீதிமன்றத்தில் வாதாடி, வழக்கில் வெற்றி பெற்றார். நடிகவேள் நடத்திய தூக்குமேடை நாடகத்தில், திருவாரூர் தங்கராசு அவர்களே வேடமேற்று நடித்தார்.

கி.ஆ.பெ.விசுவநாதன் தலைமையில் ரத்தக் கண்ணீர் நாடகம் அரங்கேற்றமானது. ஆரம்பத்தில், ரத்தக் கண்ணீர் நாடகத்திலேயே அதை எழுதிய திருவாரூர் தங்கராசு, நடிகவேள் ராதாவுடன் நடித்து வந்தார். 1970 ஆம் ஆண்டில் மயிலாடுதுறையில் நடந்த திராவிடர் கழக மாநாட்டில் இராமாயணம் நாடகம் நடந்தது. அதில் திருவாரூர் தங்கராசு இராவணன் வேடமிட்டு நடித்தார். நான் ராமன் வேடமிட்டு நடித்தேன். எனது மகன் இந்திரஜித் வேடத்தில் நடித்தார். நாடகத்தை பெரியார் இரவு வெகுநேரம் விழித்திருந்து பார்த்தார். நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோது பாதியிலேயே நேரமாகிவிட்டது புறப்படலாம் என்று அவருடனிருந்த "சிலர்" கூறியபோது பெரியார், போக மறுத்து இறுதி வரை நாடகத்தைப் பார்த்து, நாடகம் முடிந்தவுடன், நாடகத்தை பாராட்டி உரையாற்றினார்.

பெரியார் நாடகத்துக்கு தலைமை ஏற்று நிகழ்த்திய அந்த உரை முதலில் 'விடுதலை' நாளேட்டில் வெளியிடப்படவில்லை. ஏன் அதை வெளியிடவில்லை என்று பெரியாரே கேட்ட பிறகுதான், அது வெளியிடப்பட்டது. கீழப்பாவூர், உள்ளிக்கோட்டை, மன்னார்குடியில் நடந்த ராமாயணம் நாடகங்களில் திருவாரூர் தங்கராசு, ராவணன் வேடமிட்டு நடித்துள்ளார். எனவே, சிறந்த பேச்சாளராக, எழுத்தாளராக மட்டுமின்றி, நாடக நடிகராகவும் இருந்து பெரியார் கொள்கைகளைப் பரப்பியவர் திருவாரூர் தங்கராசு. இந்த விழாவில் நான் பங்கேற்றதற்காக பெருமைப்படுகிறேன்" என்று குறிப்பிட்டார்.

## "பெரியாரியல் பேரொளி!"

திருவாரூர் தங்கராசு அவர்களின் 60 ஆண்டுகாலத்துக்கும் மேலான பெரியார் லட்சியத் தொண்டை பெருமையுடன் நினைவு கூர்ந்து பெரியார் திராவிடர் கழகம் சார்பில் 'பெரியாரியல் பேரொளி' என்ற விருதை வழங்கி, விழாவில் சிறப்பிக்கப்பட்டது. விருதுக்கான நினைவுப் பரிசை மேடையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவர் ஆர். நல்லக்கண்ணு, கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், கழகத்தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் பலத்த கரவொலிகளுக்கிடையே வழங்கினர். புதுவை மாநில பெரியார் திராவிடர் கழகம் சார்பில் தலைவர் லோகு. அய்யப்பன் நினைவுப் பரிசினை வழங்கினார். கோவை மாவட்டக் கழகம் சார்பில் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன், சென்னை மாவட்டம் சார்பில் மாவட்ட தலைவர் தபசி குமரன், செயலாளர் உமாபதி ஆடைகளைப் போர்த்தினர்.

## "பெரியாருக்கே சேரும்!"

திருவாரூர் தங்கராசு தனது ஏற்பரையில் - "எனக்கு அளிக்கப்பட்ட பெருமை, சிறப்பு அனைத்தும் பெரியார் ஒருவருக்குத்தான் சேரும். பெரியாரின் கருத்துகளைத்தான் நான் அவரது எளிய தொண்டன் என்ற முறையில், என்னால் இயன்ற அளவில் பரப்பி வந்திருக்கிறேன். எனது பணியைப் பாராட்டி விழா எடுக்கும்போது, அரசு அலுவலர்கள், பணி ஓய்வு பெறும்போது விழா எடுப்பதுபோல், ஒரு வேளை, உனது பணி போதும் என்று கூறி விழா எடுக்கிறார்களோ என்றுகூட தோன்றுகிறது" என்று குறிப்பிட்டபோது, அருகில் இருந்த கழகத் தலைவர் கொளத்தூர் மணி, 'அப்படி நாங்கள் கருதவில்லை' என்று கூறவே, 'மகிழ்ச்சி எனது பணி தொடர வேண்டும் என்றே விரும்புகிறார்கள்' என்று திருவாரூர் தங்கராசு கூறினார். அதை ஆதரிக்கும் வகையில் கூட்டத்தினர் பலத்த கரவொலி எழுப்பினர்.

இறுதியில் திருவாரூர் தங்கராசு 45 நிமிடம் ஏற்புரை நிகழ்த்தினார். இறுதி வரை கூட்டம் கலையாது, அவரது உரையை செவிமடுத்தது. மாவட்ட செயலாளர் உமாபதி நன்றி கூற இரவு 10.45 மணியளவில் நிகழ்ச்சி முடிவடைந்தது. விழாவுக்கு திருவாரூர் தங்கராசு அவர்களின் துணைவியார், மகள்கள், மருமகன், பேரன் மற்றும் மூத்த பெரியார் தொண்டர்கள் பலரும் வந்திருந்து சிறப்பித்தனர்.

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# மயிலாடுதுறை, கடலூரில் சங்கராச்சாரி கண்டித்து ஆர்ப்பாடங்கள்




**மயிலாடுதுறை:** திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 26.04.25 சனி மாலை கிட்டப்பா அங்காடி அருகில் "இன ஒதுக்கல்" பேசும் சங்கராச்சாரியை கண்டித்து மாவட்ட செயலாளர் மகேஷ் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கண்டன உரையாற்றியோர்: பேராசிரியர் ஜெயராமன் தமிழ்மண் தன்னுரிமை இயக்கம், ராஜசேகர் விடுதலை சிறுத்தைகள் கட்சி, சுப்பு.மகேஷ் தமிழர் உரிமை இயக்கம், இளையராஜா,திராவிடர் விடுதலைக் கழகம். நன்றியுரை: வீரமணி

**கடலூர்:** 21.4.2025 மாலை 6 மணி அளவில் காஞ்சி சங்கராச்சாரி விஜயேந்திர சரஸ்வதி மீது சட்ட நடவடிக்கை எடுக்க கடலூரில் மஞ்சகுப்பம் புரட்சியாளர் அம்பேத்கர் சிலை அருகில் இந்த கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திவிக அருணாச்சலம் வழக்கறிஞர் வரவேற்புரை ஆற்றினார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாநில தேர்தல் பணி குழு செயலாளர் வழக்கறிஞர், இள புகழேந்தி, தமிழ் மீனவர் விடுதலை வேங்கையின் நிறுவனத் தலைவர் தமங்கையர் செல்வன், விடுதலை சிறுத்தை கட்சியின் மாநில அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் தி ச திருமார்பன், திராவிடர் கழகத்தின் கடலூர் மாவட்டச் செயலாளர் எழிலேந்தி, மக்கள் அதிகாரம் மாநில அமைப்பு செயலாளர் பாலு, பி போல்ட் இயக்கத்தின் தலைவர் பஷீர் அகமது , புதுச்சேரி தலித் மக்கள் பாதுகாப்பு இயக்கத்தின் தலைவர் புதுவை பிரகாஷ், பொதுச் செயலாளர் ராஜா, புதுச்சேரி தந்தை பெரியார் திராவிட கழகத்தின் தலைவர் வீர மோகன், விடுதலை சிறுத்தை கட்சியின் கடலூர் ஒன்றிய துணை செயலாளர் வழக்கறிஞர் கமல், புதுச்சேரி தாயுமானவர் தந்தை பெரியார் இயக்கத்தின் பொறுப்பாளர் பிரசன்னா, புதுச்சேரி தீண்டாமை ஒழிப்பு முன்னணி நகரத் தலைவர் செங்குலத்தான் ஆகியோர் கண்டன உரையாற்றினார். திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொறுப்பாளர் பெரியார் சிவா நன்றி கூறினார்.

புதுச்சேரி திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாநில தலைவர் தோழர் லோகு ஐயப்பன் அவர்கள் கலந்துகொண்டு , மறைந்த துரும்பர் விடுதலை இயக்கத்தின் அமைப்பாளர் தந்தை அருள் வலன் அவர்களின் படத்தை திறந்து வைத்து அவருக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது. திராவிட மகிழன் பாடல்கள் பாடினார்.

## கழக தலைவர் பங்கேற்ற கோவை பொதுக்கூட்டம்!

03.05.2025 அன்று கோவை சின்னியம்பாளையத்தில் பெரியார் உணர்வார்கள் ஏன் வேண்டும் திராவிட மாடல் ஆட்சி! என்ற தலைப்பில் பொதுக்கூட்டத்தை நடத்தினர். கூட்டத்திற்கு சிவா மொபைல்ஸ் சிவா தலைமை தாங்கினார். சூலூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் அன்பரசு முன்னிலை வகித்தார். கழக மாவட்டச் செயலாளர் சூலூர் பன்னீர்செல்வம் வரவேற்புரையாற்றினார்.

நிறைவாக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, சிபிஐ(எம்) மாவட்டக் குழு உறுப்பினர் ஸ்டாலின் குமார், தி.மு.க. மருத்துவரணி பெரியார் செல்வி, அ.பா.சிவா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இதில் கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில் ராசு, தி.மு.க. மகளிரணி ஜெயலலிதா, திருப்பூர் முத்து உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். வழக்கறிஞர் விஷ்ணு நன்றி கூறினார்.

இப்பொதுக்கூட்டத்தில் கோவை திருப்பூர் மாவட்டக் கழகத் தோழர்கள், தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் பொதுக்கூட்டம் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்வை வழக்கறிஞர் சரவணக்குமார் ஒருங்கிணைத்தார். இனியன் கழக தலைவர் முன்னிலையில் கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டார்

## தூத்துக்குடியில் பொதுக்கூட்டம்!

தூத்துக்குடி மாவட்ட திராவிடர் விடுதலைக்கழகம் சார்பில் அம்பேத்கர் 135 வது பிறந்தநாள் மற்றும் இன ஒதுக்கல் பேசும் சங்கராச்சாரி மீது நடவடிக்கை எடுக்க கோரி தூத்துக்குடி வடக்கு சோட்டையன் தோப்பு தருவைகுளம் மெயின் ரோட்டில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு தூத்துக்குடி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக பொருளாளர் கே.சந்திர சேகர் தலைமை வகித்தார். தூத்துக்குடி மாவட்ட திராவிடர் விடுதலைக்கழக அமைப்பாளர் பால். அறிவழகன், ஆழ்வை ஒன்றிய தி.வி.க. செயலாளர் இரா.உதயக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

ச.ரவி சங்கர் வரவேற்புரையாற்றினார். இந்நிகழ்வில் கலந்து கொண்டு திராவிடர் விடுதலைக்கழக மாநில பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் சிறப்புரையாற்றினார். அவர் தனது உரையில் இன ஒதுக்கல் பேசும் சங்கராச் சாரி மீது தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நிகழ்வில் திராவிடர் தமிழர் கட்சியின் மாநில நிதிச் செயலாளர் சு.க. சங்கர், மனித நேய மக்கள் கட்சியின் தூத்துக்குடி மாவட்டத் தலைவர் கா.மை. அகமது இக்பால், விசிக வழக்குரைஞர் அணி பொறுப்பாளர் செந் அர்ஜுன், வழக்குரைஞர் குரு. பிரசாத், தமிழர் முன்னேற்ற கழக பொதுச்செயலாளர் ச. இராஜா, புஇமு தூத்துக்குடி மாவட்ட பொறுப்பாளர் சுஜித்,தூத்துக்குடி மாவட்ட மனித நேய மக்கள் முன்னேற்ற கழகச் செயலாளர் ஷி.முகமது ஜான், சமம் குடிமக்கள் இயக்க தூத்துக் குடி மாவட்ட பொறுப்பாளர் ஜான் பூபால் ராயர், தி.மு.க. இளம் பேச்சாளர் இள.கார்த்திக், தென்காசி மாவட்ட தி.வி.க தலைவர் குறும்பை அரு. மாசிலாமணி, மாவட்டச் செயலாளர் பொ.பெ.சு.அன்பரசு, தமிழ்நாடு அறிவியல் மன்ற பொறுப்பாளர் ச.தமிழ் செல்வன், கீழப்பாவூர் ஒன்றிய தி.வி.க. செயலாளர் ச.சுப்பையா, தென்காசி .பாலசுப்பிரமணியன், நெல்லை சி.ஆ.காசிராசன், பெரியார் பிஞ்சு இர.அ.இளம் பரிதி திராவிடர் தமிழர் கட்சி தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர் ஹேமா, தமிழ்புலிகள் கட்சியின் தூத்துக்குடி மாவட் டச் செயலாளர் ஆட்டோ சரவணன், மற்றும் திராவிடர் தமிழர் கட்சி, வடக்கு சோட்டையன் தோப்பு அம்பேத்கர் இளைஞரணி, வி.சி.க தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர். நிறைவாக தூத்துக்குடி நகர தி.வி.க. பொறுப்பாளர் சா.த. பிரபாகரன் நன்றியுரையாற்றினார்.

## இணையதள பிரிவின் மின்னூல்

***கழக இணையதள பிரிவு சார்பாக கடந்த ஏப்ரல் 21 தேதி மயிலாடுதுறை மாநாட்டின் தீர்மானத்தை ஒட்டி கழகம் சங்கரச்சாரிக்கு எதிராக பெரியார் முழக்கத்தில் எழுதிய செய்திகளை இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார் தொகுத்து "இன ஒதுக்கல் பேசும் சங்கராச்சாரி" என்ற தலைப்பில் மின்னூல் வெளியிடப்பட்டது.***

***அட்டைப்பட வடிவமைப்பு: அருண் இளைஞரணி, நூல் வடிவமைப்பு: பரிதி. மேலும் இந்த மின்னூல் கழக இணையதள பக்கத்தில் இலவசமாக படிக்கலாம்.***

## மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன் இல்லம் சென்று ஆ.ராசா நலம் விசாரித்தார்.

திராவிடர் விடுதலைக் கழகத்தின் கோவை மாவட்டத் தலைவர் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன் அவர்கள் இல்லத்துக்கு சென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா அவர்கள் நலம் விசாரித்தார். உடன் திமுக பொறுப்பாளர்கள் ரோட்ஜ், முனுசாமி தொண்டாமுத்தூர் ரவி, சி.ஆர் இராமச்சந்திரன், அருண், அறிவரசு மற்றும் கழக தோழர்கள் பலர் உடன் இருந்தனர்.



## நாத்திகர் விழா! கழகத் தோழர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

தோழர்களுக்கு வணக்கம்,வருகிற நாள் 24.05.25 சனிக்கிழமை சேலம் மாவட்டம் கொளத்தூரில் திராவிடர் விடுதலைக் கழக பெண்களே தலைமையேற்று முழுமையாக நடத்தும் "நாத்திகர் விழா "நடைபெற உள்ளது.

"நாத்திகர் விழா"வின் முதல் நிகழ்வாக முக்கிய நிகழ்வாக மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலம் நடைபெற உள்ளது. மூட நம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்தில்,

1. முதுகில் அலகு குத்தி கார் இழுப்பது
2. முதுகில் அலகு குத்தி தொங்கும் பறவைக் காவடி
3. தீச்சட்டி ஏந்துதல்
4. ஆணிப் படுக்கையில் படுத்து வருவது
5. அரிவாளின் மீது ஏறி நிற்பது
6. கன்னத்தில் அலகு குத்துவது
7. கன்னத்தில் முதுகில் எலுமிச்சம்பழம் குத்துவது
8. நாக்கில் சூடத்தை எரிய விடுவது
9. நெருப்பை கக்குவது
10. சுருள் வீச்சு
11. தீப்பந்தம் சுற்றுதல்
12. சிலம்பம்

போன்ற நிகழ்வுகளில் பங்கேற்க விரும்பும் தோழர்கள் தங்கள் பெயர்களை கீழ்காணும் அலைபேசி எண்ணில் முன்கூட்டியே பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.

***"மூடநம்பிக்கைகளை ஒழிப்போம்!"***
***"அறிவியல் மனப்பான்மையை வளர்ப்போம்!"***

***- திராவிடர் விடுதலைக் கழக மகளிர் அணி,***
***சேலம் மாவட்டம்***
***கொளத்தூர் தோழர். காயத்திரி***
***7373893451***

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : May 15, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran